# THE ERODE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD.,

## Sri Vasavi College Post, ERODE – 638 316

Ref.No: 101/ DAIRY/ D2/Various Tender/2022 - 2024 Date:12.04.2022

To

The Public Relation Officer,
Tamilnadu Cooperative Milk
Producers' Federation Ltd.,
2A, PasumponMuthuramalingar Salai,
Nandanam,
Chennai- 600035.

Sir/ Madam

Sub: EDCMPU Ltd., Erode – Dairy Section - Various Tender for the year 2022 - 2024 Tender Notice to be Published – notification as per TNTT Act & Rules – requested – Regarding.

**************

We herewith enclose the tender notification in Tamil Version for, Various Tender for the year 2022 - 2024 Kindly arrange to publish the tender notification in accordancewith the TNTT Act & Rules in newspaper on or before 13 .04.2022 with minimum size. Tender value is Rs.48.40 Lakh only.

1. One Tamil Daily (All editions in the State)
2. One English Daily (All editions in the State)
3. Tender Bulletin

The approximate value of the total tenders is Rs.48.40 Lakh. Kindly arrange to send the copies of the paper advertisement and statement of tender bulletin for our reference at the earliest.

For Erode District Co-op Milk
Producers' Union Ltd.
Sd/-M.Balasubramaniam
General Manager

12/4/22
For General Manager

Encl:

Advertisement notice in Tamil and Tender Bulletion

**ஆவின்**

**ஈரோடுமாவட்டக் கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,**
**வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு–638316.**
**கைபேசிஎண்: 8883600103**

**ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு**

ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளாகள் ஒன்றியத்தில் நடைபெற்று வரும்1)100 மிலி, 200 மிலி நெய் ஜார் பேக்கிங் செய்தல் பணி 2) பால் ஏற்றுதல், பால் இறக்குதல் பணிக்கும் மற்றும் டேங்கர் கிளினீங் செய்தல் பணி ஆகிய ஒப்பந்த பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்படிவம் ஒன்றியத்தில் – 13.04.2022 காலை 10.30மணிமுதல் 27.04.2022 மாலை04.00மணி வரை ஒவ்வொரு ஒப்பந்தப்பணிக்கும் ரூ.1,000/- (4%வரிகள் தனி) ரொக்கம் செலுத்திபெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்படிவம் மற்றும் விதிமுறைகள் www.tenders.tn.gov.in என்ற இணையவலைதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்வைப்புத் தொகைவிபரம் ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. பூர்த்திசெய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஒன்றியத்தில் சமர்ப்பிக்ககடைசி நாள்: 27.04.2022 அன்று காலை 11:00மணி வரை. ஒப்பந்தப்புள்ளி திறவுசெய்யும் நேரம்: 28.04.2022 அன்று காலை 11:30மணி.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்காக
(ஒப்பம்) எம்.பாலசுப்ரமணியம்
பொது மேலாளர்
T. [signature] 12/4/22
பொது மேலாளருக்காக

மாநில அளவிலான டெண்டர் புல்லட்டின் (விளம்பரம்)

ஆவின்
ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
வாசவி கல்லூரி (அஞ்சல்),ஈரோடு-638316.
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கையின் விவரம்

| | | |
|---|---|---|
| 01 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரின் பெயர் மற்றும் பதவி | திரு.மூ.பாலசுப்ரமணியம்,<br>பொது மேலாளர்,<br>ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,<br>வாசவி கல்லூரி (அஞ்சல்),<br>ஈரோடு-638 316. |
| 02 | ஒப்பந்த பணிகளின் விவரம், | 1) 100மிலி மற்றும் 200 மிலி நெய் ஜார் பேக்கிங் செய்யும் பணி<br><br>2)காலி பால் டேங்கரை கழுவி பால் ஏற்றுதல் மற்றும் இறக்குதல் பால் டேங்கரை கழுவி சுத்தம் செய்தல் பணி |
| 03 | ஒப்பந்த பணி நடைபெறும் இடம் | ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,<br>வாசவி கல்லூரி (அஞ்சல்),<br>ஈரோடு-638 316. |
| 04 | எந்த இடத்தில் எந்த தேதி வரை ஒப்பந்தப்படிவம் கிடைக்கும் என்ற விபரம் | ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,<br><br>பண்ணைப்பிரிவு 27.04.2022 பிற்பகல் 4.00 மணி வரை கிடைக்கும்.<br><br>ஒப்பந்தப்புள்ளி படிவம் அலுவலக வேலை நாட்களில் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே ரூ.1,000/-(4%வரிகள் தனி) (ரொக்கமாக ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.<br><br>தபாலில் பெற ரூ.100/- கூடுதலாக செலுத்த வேண்டும்.)<br><br>www.tenderstn.gov.in என்ற இணைய வலைதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 05 | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத்தொகை | 1) 100மிலி மற்றும் 200 மிலி நெய் ஜார் பேக்கிங் செய்யும் பணி ரூ.8,400/- |

| | | |
|---|---|---|
| | | 2)காலி பால் டேங்கரை கழுவி பால் ஏற்றுதல் மற்றும் இறக்குதல் பால் டேங்கரை கழுவி சுத்தம் செய்தல் பணி ரூ.40,000/- |
| 06 | ஒப்பந்தம் சம்மந்தமாக விளக்கம் அளிக்கும் இடம், நாள், மற்றும் நேரம் | இடம் : ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈரோடு—638 316<br>நாள் : 27.04.2022<br>நேரம் : காலை 11.00மணி |
| 07 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள், நேரம் மற்றும் இடம். | நாள் : 28.04.2022<br>நேரம் : காலை 11.00மணி வரை<br>இடம் : ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈரோடு—638 316. |
| 08 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் இடம், நாள் மற்றும் நேரம்.<br>பகுதி 1 தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid)<br>பகுதி 2 தகுதி வாய்ந்த வணிகநுட்ப ஒப்பந்த புள்ளிகள் (Eligible Commecial Bid) | இடம் : ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈரோடு—638 316.<br>நாள் : 28.04.2022<br>நேரம் : காலை 11.30மணி<br>28 .04.2022 அன்று அல்லது பின்னர் அறிவிக்கப்படும். |
| 09 | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் தகவல் | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் எதிர்பாராத விதமாக விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் பெற்று திறக்கப்படும். எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ, மறுக்கவோ, விதிமுறைகளை மாற்றி அமைக்கவோ, முழுமையாக டெண்டரை நிராகரிக்கவோ, பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு. |

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்காக
(ஒப்பம்) எம்.பாலசுப்ரமணியம்
பொதுமேலாளர்

பொது மேலாளருக்காக

ஈரோடுமாவட்ட கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
வாசவிகல்லூரி (அஞ்சல்),ஈரோடு–638 316.
தொலைபேசி: 8883600103

## ஒப்பந்தப்படிவம்

1) பணியின் பெயர் : 100மிலி,200மிலி நெய் ஜார் பேக்கிங்

2) பணியின் நேரம்: அன்றாடம் காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை
இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை
அல்லது காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி
வரை, அல்லது இரவு 8.00 மணி முதல் காலை 4.00 மணி வரை

3) முன் வைப்புத்தொகை : ரூ.8,400/-

4) காப்புத்தொகை : ரூ.42,000/-

5) பணியின் காலம் : ஒப்பந்தம் வழங்கும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள்

6) ஒப்பந்தப் படிவம் பெற : ஒன்றியத்தில் 13.04.2022 முதல் தினசரி வேலை நாட்களில் காலை 10.30மணி முதல் மாலை 04.00மணி வரை மற்றும் www.tenders.tn.gov.in–ன்இணையதளத்தில் இலவசமாகபதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

7) ஒப்பந்தப்படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசிநாள் : 27.04.2022மாலை 04.00மணி வரை

8) பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்க கடைசி நாள் : 28.04.2022 தேதி காலை 11.00 மணி வரை

9) ஒப்பந்தப் புள்ளி டெக்னிக்கல் பிட் திறக்கும் நாள் : 28.04.2022 தேதி காலை11.30 மணி

பணியின் தன்மை

அன்றாடம் ஒன்றிய பண்ணைப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் நெய்யினை 100மிலி, 200மிலி ஜார்களில் நிரப்பி அட்டை பெட்டிகளில் அடைத்து அறையில் முறையாக அடுக்கி வைத்தல் வேண்டும். நெய் உற்பத்தி அதிகரிக்கும் நாட்களில் தேவைக்கு ஏற்ப ஆட்கள் பேக்கிங் பணிக்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

*100மிலி, 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்தல் பணிக்கான ஒப்பந்த அட்டவணை* அனுப்புதல்

பெறுதல்
பொதுமேலாளர் அவர்கள்,
ஈரோடுமாவட்டக் கூட்டுறவுபால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
வாசவிகல்லூரி (அஞ்சல்),
ஈரோடு–*638 316*

ஐயா,

1.இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்த படிவத்தின் அனைத்து பகுதிகளும் முழுமையாக என்னால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2.தங்களிடமிருந்து ஒப்பந்த நியமன உத்திரவு வழங்கும் பட்சத்தில் உடனடியாக அனைத்து ஆவணங்களும் அதாவது காப்புத்தொகை செலுத்துதல், முத்திரைத்தாளில் ஒப்பந்தம் சமா்ப்பித்தல், தங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது இவ்வொன்றியத்தில் நியமன உறுப்பினராகுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
3.ஒப்பந்தப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சரத்துக்களும் என்னால் முழுமையாக படித்து அறியப்பட்டு அதை ஏற்றுக்கொள்கிறேன் என சான்று செய்கிறேன்.
4.ஒப்பந்தம் தொடர்பாக பொதுமேலாளர், ஈரோடு ஒன்றியம் அவர்களால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் நான் கட்டுப்படுவேன்.
5.பக்கம் 01 முதல் பக்கங்கள் உரிய ஒப்பந்தப் படிவம் என்னால் கையொப்பமிட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.
6.பொதுமேலாளர் அவர்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ, திருத்தியமைக்கவோ ஒப்பந்தகாலத்தை ஒத்திவைக்கவோ, தள்ளுபடி செய்யவோ முழு அதிகாரம் உண்டு என்பதை நான் அறிவேன்.
7.ஒப்பந்த தொழில்நுட்ப பகுதியில் முன்வைப்புத் தொகையை இணைத்து முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அனைத்து ஆவணங்களுடன் ஒரு தனிக்கவரில் போட்டு அரக்கு சீல் வைத்தும், வணிக நுட்பப்புள்ளியை முழுமையாகப் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு ஒரு தனி கவரில் போட்டு அரக்குசீல் வைத்தும் இந்த இரண்டு சீல் வைக்கப்பட்ட கவர்களை வேறொரு கவரில் போட்டு அரக்குசீல் வைத்து எனது முழு முகவரியுடன் ஒவ்வொரு கவரின் மேல் பகுதியில் **100மிலி,200மிலி நெய்ஜார் பேக்கிங் செய்யும் பணிக்கான ஒப்பந்தம்** என குறிப்பிட்டு பொதுமேலாளர், ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சமா்ப்பிக்கிறேன்.

இடம்:

நாள்: ஒப்பந்ததாரரின்கையொப்பம்

ஈரோடுமாவட்டக்கூட்டுறவுபால்உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
வாசவிகல்லூரி ஈரோடு–638316.

பகுதிதொழில்நுட்பபுள்ளி – 100மிலி, 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்தல் பணி ஒப்பந்தம் 2022–2024

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்ததாரரின் பெயர் | |
| 2. | ஒப்பந்ததாரரின் முழு முகவரி | |
| 3. | தொடர்புகொள்ளவேண்டியதொலைபேசி:<br>கைபேசிஎண் | |
| 4. | தொலைநகல் (Fax)/E Mailவிபரம் | |
| 5. | ஒப்பந்ததாரரின் நிறுவனம் பதிவுசெய்தநிறுவனமா? | |
| 6. | ஆம் எனில் பதிவுஎண் மற்றும் விபரங்கள் | |
| 7. | ஈ.எஸ்.ஐ. பதிவுஎண் (சான்றிதழ் நகல் இணைக்கவும் | |
| 8. | பி.எப்.பதிவுஎண் (சான்றிதழ் நகல் இணைக்கவும்) | |
| 9. | பான் கார்டுஎண் (சான்றிதழ் நகல் இணைக்கவும்) | |
| 10. | முன்வைப்புத்தொகைசெலுத்தியவிபரம் (வங்கிவரைவோலை இணைக்கவும்) | |
| 11. | ஜி.எஸ்.டி பதிவுஎண் (சான்றிதழ் நகல்இணைக்கவும்) | |
| 12. | வேறுஏதேனும் விவரங்கள் இணைத்திருந்தால் தெளிவுபடுத்துக: | |

குறிப்பு:வரிசைஎண் 6,7,8,9 மற்றும் 10–க்கான ஆவணங்கள் இணைக்கப்படாவிட்டால்,ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

இடம்:

நாள்: ஒப்பந்ததாரர் கையொப்பம்

# ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

பகுதிIIவணிகநுட்பப்புள்ளி– 100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்யும் ஒப்பந்தம் 2022 – 2024

1. ஒப்பந்ததாரரின் பெயர் :

2. ஒப்பந்ததாரரின் முழு முகவரி:

3. தொடர்புகொள்ளவேண்டிய
   தொலைபேசிஎண் மற்றும்
   கைபேசிஎண் :

4. 100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார் பேக்கிங்
   செய்ய விலை (ஜார் ஒன்றுக்கு) :ரூ.
   including ESI,P.F.G.S.Tஉட்பட):ரூ.
   (அனைத்துவரிகள் உட்பட)

இடம்:ஒப்பந்ததாரரின் கையொப்பம்.

நாள்:

(100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்ய ஒப்பந்தப் பணிக்கு ஒப்பந்தப் படிவம், அட்டவணை, தொழில்நுட்பபுள்ளி, நிபந்தனைகள், மற்றும் வணிகநுட்பப்புள்ளி ஆகியவைகள் பொதுமேலாளர் அவர்களின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.)

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
ஒப்பந்த அடிப்படையில் 100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்யும் பணிக்கான நிபந்தனைகள்:

1. 100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார்பேக்கிங் செய்யும் பணிக்கு A ஷிப்ட் (6.00am to 2.00p.m)B ஷிப்ட் (2.00p.m to10.00p.m.)C ஷிப்ட்(10.00p.m to 6.00a.m) A மற்றும் B ஷிப்ட்டுகளுக்கு முறையே 3 பெண் பணியாளர்களும் 1 ஆண் பணியாளரும் C ஷிப்ட்டிற்கு 4 ஆண் பணியாளர்களும் அனுப்பவேண்டும்.

2. பணியாளர்களின் வயது வரம்பு குறைந்தபட்சம் 21 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும். குழந்தை தொழிலாளர்களையும் தொழுநோய், கடும் வியாதி உள்ளவர்களையும் பணியமர்த்தக் கூடாது.

3. பணி தொடங்கும் முன் கைகளை சுத்தமாக கழுவிய பின்பு மட்டுமே பணியை தொடங்க வேண்டும்.
4. பணி நேரத்தில் கையுறை, வாயுறை, தலையுறை மற்றும் மேலங்கி முதலானவைகளை அவசியம் அணிந்து கொள்ள வேண்டும்.

5. உணவுப் பொருட்களை கையாளும் இடங்களில் பணியாளர்கள் நகப்பூச்சு, பூ, கண்ணாடி வளையல்கள், மோதிரம், காதணிகள், கையில் அணியும் ரப்பர்பேண்டுகள், மற்றும் கைக்கடிகாரங்கள் முதலானவைகளை அணிந்து கொண்டு பணி செய்யக்கூடாது.

6. பணி செய்யும் இடங்களில் வாசனை திரவியங்களை உபயோகப்படுத்த கூடாது.

7. பணியாளர்கள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் லாகிரி வஸ்துகளை உபயோகப்படுத்த கூடாது.

8. ஒப்பந்ததாரர் வருங்கால வைப்பு நிதி, இ.எஸ்.ஐ, வருமான வரி மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய, மற்றும் பெற வேண்டிய அனுமதியை ஒப்பந்ததாரர் பெற்று கடன் பட்டியலுடன் சமர்பிக்க வேண்டும்.

9. ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விபத்து ஏதேனும் ஏற்படின் அப்பணியாளர்களுக்கு உண்டான நஷ்ட ஈட்டுத் தொகையை ஒப்பந்ததாரரே ஏற்க வேண்டும்
10. பால் பண்ணையில் இருந்து எந்த பொருளையும் ஒப்பந்தப் பணியாளர்கள் அனுமதியின்றி வெளியில் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

11. ஒப்பந்ததாரர் தொழிலாளர் நல அலுவலர், தொழிற்சாலை ஆய்வாளர் மற்றும் அரசு, காப்பீட்டுக் கழக அலுவலர் அவர்களால் அவ்வப்பொழுது குறிப்பிடும் விதி முறைகளுக்கு உட்பட்டு பணியாற்ற வேண்டும். தேவையான விபரங்களை அளிக்கவேண்டும்
.
12. பொதுமேலாளர் மற்றும் பண்ணை அலுவலர்களால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளின்படி நடந்து கொண்டு தேவைப்பட்டியல்படி உற்பத்தி மற்றும் பேக்கிங் பணியில் எந்த பாதிப்பு இல்லாமல் பணிமேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் பொதுமேலாளர் அவர்களின் உத்தரவுப்படி அபராதத் தொகை விதிக்கப்படும். அபாராத தொகையினை முடிவு செய்ய பொதுமேலாளருக்கு முழுஅதிகாரம் உண்டு.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

13.ஒப்பந்த பணியாளர்களை ஒருங்கினைத்து சுமூகமாக பணிநடைபெற பொறுப்பாளரை (சூப்பர்வைசர்) நியமித்து அவரின் பெயர், தொலைபேசிஎண், விவரத்தை தனியாக எழுத்து மூலமாக கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும்.

14. எவ்வித காரணமும் காட்டாமல் ஒப்பந்தகாலத்தின் இடையில் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொதுமேலாளருக்கு அதிகாரம் உண்டு.

15. பணிநேரத்தில் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஏற்படும் எதிர்பாராத விபத்துகளுக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். ஒன்றியம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

16. ஒப்பந்தப்பணி செய்யும் பணியாளர்களுக்கு வழங்கும் தினசரி ஊதியம் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயித்த அளவுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

17. ஒப்பந்தப் பணியாளருக்கு ஒப்பந்ததாரரால் போட்டோவுடன் உள்ள அடையாள அட்டை வழங்க வேண்டும்.

18 பணியாளர் பணி நேரத்தில் FSSAI/உணவு பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பணியாற்றிட வேண்டும்.

19. ஒப்பந்ததாரரிடம் குறைந்தபட்சம் எத்தனை பணியாளர்கள் பணி செய்யதயாராக உள்ளனர், அவர்களது பெயர் விலாசம் முதலான விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

20. பணிக்கு வரும் ஒப்பந்தப் பணியாளர்கள் நாள்தோறும் பாதுகாவலர் அறையில் பெயர், பணிக்கு வரும் நேரம் பணி முடித்து திரும்பும் நேரத்தை பதிவு செய்து அதன் விபரத்தை கடன் பட்டியலுடன் சேர்த்து சமர்பிக்க வேண்டும்.

21. தொழிலாளர் நலச் சட்ட திட்டங்களுக்கும் மற்றும் இதர சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பது ஒப்பந்ததாரரின் முழு பொறுப்பாகும்.

22. விசேஷ நாட்கள், விடுமுறை நாட்கள், பண்டிகை நாட்கள் மற்றும் பால் வரத்து அதிகரிப்பு குறைவு நாட்களில் பணியின் நேரம் மாற்றம் செய்ய நேரிடும் பட்சத்தில் தேவையான நேரத்தில் தேவையான பணியாளர்களை அனுப்ப வேண்டும்.

23. ஒப்பந்தப் பணியாளர் வராததால் 100மிலி மற்றும் 200மிலி நெய் ஜார் பேக்கிங் செய்யும் பணி பாதிப்பு அடையாமல் இருக்க செய்யப்படும் மாற்று ஏற்பாட்டிற்கு ஆகும் செலவின் மதிப்பில் இரு மடங்கு அல்லது ரூ.1000.00 இதில் எது அதிகமோ அது அபராத தொகையாக தங்களின் கடன் பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

24. ஒப்பந்தப் பணியாளர்கள் வேலை நேரத்தில் மற்ற பிரிவுகளில் எக்காரணம் கொண்டும் சுற்றக்கூடாது. மற்ற பிரிவு பணிகளுக்கு இடையூறாக இருக்க கூடாது.

25 பால் பண்ணையில் இருந்து எந்த பொருளையும் ஒப்பந்த பணியாளர்கள் அனுமதியின்றி வெளியில் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

26. ஒப்பந்த முறையில் பணியாற்றும் பணியாளர்கள் ஒன்றியத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் யாரும் நடந்து கொள்ளாமல் பணியாற்ற வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

27 பொதுமேலாளர் மற்றும் பண்ணை அலுவலர்களால் அவ்வப்போது பணியின் தன்மை பற்றி இடப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

28. மேற்கொள்ளப்படும் பணியில் திருப்தி ஏற்பட வில்லை என பொதுமேலாளர் கருதினால் தங்களின் ஒப்பந்தத்தை எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

29. ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலத்தில் இடையில் பணியை தொடர முடியாவிடின் அதனால் மாற்று ஒப்பந்ததாரரை நியமிக்க நேரிட்டால் ஒப்பந்ததாரர் தான் செலுத்திய டெபாசிட் தொகையை இழப்பதுடன், அதனால் ஒன்றியத்திற்கு ஒப்பந்தகாலம் முடியும் வரை ஏற்படும் இழப்புத் தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து வசூலிக்கபடும்.

30 செலுத்தபடும் காப்புத் தொகை ஒப்பந்தகாலத்தில் பணியை திருப்தியாக முடித்திருப்பின் ஒப்பந்த காலத்திற்கான இறுதித் தணிக்கை முடித்த பின்னரே திரும்ப வழங்கப்படும். இக்காப்புத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

31. அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாலம் முடிவடைந்த பிறகு ஒப்பந்ததாரர் தொடர்ந்து அதிகபட்சம் ஆறு (06) மாதங்களோ அல்லது அடுத்து வரும் புதிய ஒப்பந்தம் உறுதி செய்யும் வரையோ இவற்றில் எது முன்னதாக நிகழ்கிறதோ அதுவரை ஏற்கனவே செய்து வரும் ஒப்பந்த விலைப்புள்ளிக்கே மற்றும் அதே நிபந்தனைக்கு கட்டுப்பட்டு பணிசெய்ய வேண்டும்.

32. முன்வைப்புத் தொகை செலுத்தாமல் பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கபடும். ஒன்றியத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ள எவ்விதத் தொகையும் பிணைவைப்புத் தொகைக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

33. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உரிய ரூ.100.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்துதர வேண்டும்.

34 ஒப்பந்தம் சம்மந்தமாக வழக்கு மற்றும் விவகாரங்கள் அனைத்தும் துணைப்பதிவாளர் (பால் பதம்) ஈரோடு அவர்கள் நடுவர் மன்றம் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

35 முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை (General Manager, EDCMPU LTD, Erode)என்னும் பெயரிலும், பூர்த்தி செய்யும் அனைத்து சட்டப்பூர்வ பதிவு ஆவணங்களின் நகல்கள் மற்றும் ஒப்பந்த படிவத்தின் அனைத்துப் பக்கங்களிலும் ஒப்பந்ததாரர் கையொப்பம் இட்டு தொழில் நுட்பபுள்ளியுடன் (TECHNICAL BID)இணைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு சான்று ஆவணங்கள், முன் வைப்புத் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட ஆவணங்கள் ஏதும் வணிகப் புள்ளியுடன் கண்டிப்பாக(COMMERCIAL BID) இணைக்க கூடாது.

36. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி(TECHNICAL BID) ஆய்வில் தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி கடிதங்கள் மட்டுமே வணிகப்புள்ளி (COMMERCIAL BID) கடிதங்கள் திறக்க ஏற்றுக் கொள்ளபடும்.

37. தொழில்நுட்ப ஆய்வில் தகுதி இல்லாத விலைப்புள்ளியின் வணிகபுள்ளி திறக்க ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

38 ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரர் ஒன்றியத்திற்கு ரூ.10.00 செலுத்தி அசோசியேட் உறுப்பினராக பதிவு செய்து கொள்ளவேண்டும்.

39. பொருட்கள் தயாரித்தல், பேக்கிங் செய்யத் தேவையான பொருட்களை பிரிவு அலுவலர்களின் அனுமதி பெற்று பண்டக சாலையில் இருந்து ஒப்பந்ததாரரே சென்று பெற வேண்டும். இதில் அளவு குறைவு ஏதேனும் ஏற்படின் ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

40. ஒப்பந்தப்பணி செய்யும் பணியாளர்களுக்கு வழங்கும் தினசரி ஊதியம் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயித்த அளவுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

41. கடித போக்குவரத்தில் ஏற்படும் காலதாமதத்திற்கு ஒன்றியம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. அனைத்து கடிதபோக்குவரத்தும் பொதுமேலாளர் அவர்களின் முழு முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

42. ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் ஒப்பந்த பணி செய்யும் பணியாளர்களுக்கு அரசுபதிவு பெற்ற மருத்துவ அலுவலரிடம் குறிப்பிட்ட படிவத்தில் உடல் நலம் பற்றிய சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒன்றியம் தேவையான ஏற்பாடுகள் செய்து சான்று பெறப்படும். இதற்கான முழு செலவையும் ஒப்பந்ததாரரின் கடன் பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

43. பணிக்கு வரும் ஒப்பந்தப் பணியாளர்கள் நாள்தோறும் பாதுகாவலர் அறையில் பெயர், பணிக்கு வரும் நேரம் பணி முடித்து திரும்பும் நேரத்தை பதிவு செய்து அதன் விபரத்தை கடன் பட்டியலுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

44 தற்போது செய்து வரும் ஒப்பந்தப்பணி அல்லது இதற்கு முன்பு ஒப்பந்த பணி செய்த நிறுவனத்தில் சரிவர பணி செய்யாமல் ஏதேனும் குறைபாடுகளுக்காக மூன்று முறை அல்லது அதற்கு மேல் கடிதம் வழங்கப்பட்டிருந்தால் இந்த ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதியற்றவர் ஆவார். மேலும் ஒப்பந்தம் கிடைக்கப் பெற்ற பின் இது தொடர்பான விவரம் தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொதுமேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

45 தங்களின் ஒப்பந்ததத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் பணிநேரத்தில் அடையாள அட்டை அணிந்திருத்தல் வேண்டும்.

46. ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் தங்களிடம் பணிக்கு வரும் பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் அவர்களுடைய ஆதார் எண் முழு விபரங்களும் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்

47. தாங்கள் பணிபுரியும் இடத்தினை ஒருமணி நேரத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்து சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

48. அன்றாட பணிகளை அவ்வப்பொழுது ஒன்றிய துணைமேலாளர் (பண்ணை) கூறும் வழிமுறைகளை பின்பற்றி பணிமேற்கொள்ள வேண்டும். ஒன்றிய துணை மேலாளர் (பண்ணை)அவர்களால் அவ்வப்பொழுது வழங்கப்படும் உற்பத்தி இலக்கிற்கு தகுந்தவாறும், அதனை நிறைவேற்ற சிலநேரங்களில் அதிகபட்ச ஆட்களை கொண்டும் உற்பத்தி இலக்கை சுணக்கமின்றி குறிப்பிட்ட காலநேரத்திற்குள் உற்பத்தி செய்து தரவேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

49. அவ்வப்போது பண்ணை பிரிவை ஆய்வு செய்யவரும் உயர் அதிகாரிகள் குறித்த விபரத்தினை தமது ஒப்பந்த பணியாளர்களுக்கு தெளிவாக தெரிவித்து அவர்கள் பார்வையிட வரும் பொழுது மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

50. கேட்புபட்டியல்கள்படி அன்றாடம் பொது பண்டகசாலையில் இருந்து எடுக்கப்படும் பேக்கிங் சம்பந்தமான பொருட்களின் விபரங்களையும் மற்றும் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருட்களின் விபரங்களையும் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்து அதாவது

ஆரம்ப இருப்பு :

அன்றையதினம் பண்டகசாலையில் இருந்து எடுக்கப்பட்டதின் விவரம் :
உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டவைகளின் விவரம் :
மீதம் இறுதி இருப்பாக உள்ளவைகளின் விவரங்கள் : குறிக்கப்பட்டு அந்த சிப்டில் பணியில் உள்ள துணைமேலாளர் (பண்ணை) அவர்களிடம் விபரம் காண்பித்து சான்றொப்பம் பெறவேண்டும்.

51. கேட்புபட்டியலின்படி (indent) பொதுபண்டக சாலையில் இருந்து எடுத்து வரும் பொருட்களை சரிபார்த்து பாதுகாப்பாக வைத்து கொள்ளவேண்டும். அதில் எண்ணிக்கையில் குறைவு/கூடுதல் மற்றும் உபயோகிக்க முடியாதவையாக இருந்தால் அதுகுறித்து உடனடியாக சிப்டில் உள்ள துணைமேலாளர்(பண்ணை) அவர்களிடம் தகவல் தெரிவித்து அதற்கான உரிய பதிவேட்டில் ஒப்புகை பெறப்பட வேண்டும்.

52. பண்டகசாலையிலிருந்து எடுக்கப்படும் 100மி.லி., 200.மி.லி. நெய் ஜார்களை எண்ணிகை அடிப்படையில் பயன்படுத்தி அதன் கணக்குகளை நேர் செய்து துணைமேலாளர்(பால்) அவர்களிடம் தினமும் ஒப்படைக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

53. உற்பத்தி செய்யப்படும் 100மி.லி., 200.மி.லி. நெய் ஜார்கள் துணைமேலாளர்(பால்) அவர்களின் அறிவுரைப்படி எங்கு இருப்பு வைக்க சொல்லப்படுகிறதோ அங்கு சரியான எண்ணிகையுடன் இருப்பு வைக்கப்பட வேண்டும். பண்ணை வளாகத்திற்குள் எங்கு இருப்பு வைக்க சொல்லப்படினும் அதற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். தவறும்பட்சத்தில் ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்.